மாதுரி தேவி

வாழ்க்கை வரலாறு

ஆசிரியர்: "நிழல்"

கொக்கரகோ
பதிப்பகம்
36, படவட்டம்மன் கோவில் தெரு,
பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,
சென்னை - 12

முதற் பதிப்பு —°—1951

விலை 8 அணா

வெளியிட்டவர்கள் :
கோக்கரகோ பதிப்பகம்
அச்சகம் :
கமர்ஷியல் பிரிண்டிங் அண் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை-1

முன்னுரை

நாரதரை திரிலோக சஞ்சாரி—அதாவது மூன்று உலகங்களில் வசிப்பவர்—என்று சொல்வார்கள். ஆனால், மாதுரியோ ஒரே உலகில் மூன்று பெயருள் வசிப்பவர்! கிளாரா—எம். எஸ். சந்திரா—மாதுரி தேவி—ஆகிய மூன்றும் அவருடைய பெயர்களே. கிளாரா என்ற சொந்தப் பெயரை சினிமா உலகப் பிரவேசத்தின்போது சந்திராவாக ஆக்கிக்கொண்டார். "வாயாடி"யில் நடித்தபின் வெகுகாலம் சும்மாயிருந்துவிட்டு, "மாதுரி தேவி" என்ற புதுப் பெயருடன் சினிமாவில் மீண்டும் ஈடுபட்டார். இந்தக் கடைசிப் பெயரே அவருக்கு ஏராளமான புகழையும், பணத்தையும் வாரிக் கொடுத்திருக்கிறது.

சாதாரண உப-பாத்திரத்திலிருந்து நக்ஷத்திரப் பதவிக்கு உயர்ந்தவர் மாதுரி தேவி. முக அழகு, நடிப்புத் திறமை, பேச்சுவன்மை எல்லாம் அவரிடம் பொருந்தியுள்ளன. பொதுஜனத்தை நிறையப்பெற்று தற்போது முன்னணியில் பிரகாசிக்கும் தமிழ் சினிமா நக்ஷத்திரங்களில் மாதுரி ஒருவராவார். எதிர் காலத்தில் அவரது புகழ் மேலும் அதிகரிக்கக்கூடும்.

புகழைப் போலவே வாழ்க்கையிலும் முதல் படியிலிருந்து உச்சியை அடைந்துள்ள மாதுரியின் வாழ்க்கையே ஒரு நாவல் கதைபோல சுவாரஸ்யமாயிருக்கும். அவர் சினிமாவைப் பற்றி ஒன்றுமே அறியாமலிருந்தபோது சினிமாவில் நடிப்பதற்கான சந்தர்ப்பம் அவரை வலியத் தேடி வந்தது. பிறகு அவர் நடிப்பதற்கு துடிதுடித்தபோது சந்தர்ப்பமே கிடைக்காமற் போய்விட்டது. கடைசியில் தான் அவா, சந்தர்ப்பம் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து "மாதுரியை" உருவாக்கியுள்ளன. எதற்கும் ஆகும் காலம் வரவேண்டுமல்லவா!

இப்புத்தகத்தில் மாதுரியின் வாழ்க்கை எவ்வளவு முடியுமோ அவ்வளவு விவரங்களுடன் நடித்த படங்களின் 'ஸ்டில்'கள், சொந்தப் போட்டோக்கள் ஸ்வாரஸ்யமான முறையில் வெளியிடப்பட்டுள்ளது.

3—2—1951


—"நிழல்"

பதிப்புரை

காலத்தைப் போக்குவதற்கும், கவலையை வொழிப்பதற்கும் மேடைப் பேச்சுகளையும், ஆடல் பாடல்களையும், நாடகங்களையும் ஆதியில் ஆன்ருேர்கள் ஆக்கி அமைத்து வைத்தார்கள். வழி வழியாக இன்று நாம் அனுபவித்து வருகிருேம், நாடகக் கலையில் உச்சஸ்தானம் பெற்ற நம் நாடு இன்று உறங்கிக் கிடக்கின்றது, கால மாறுபாட்டின் படி இன்று முற்போக்குடன் எந் நாட்டினும் சினிமாக் கலை உன்னத நிலை அடைந்து வருகிறது. இந்தக் கலையில் மக்கள் யாவரும் அதிக கவனம் செலுத்தி வருகிருர்கள் என்பது மிகையாகாது. அதுமட்டுமல்ல ; சினிமாத் துறையிலுள்ள ஒவ்வொரு அம்சங்களின் விவரங்களையும் மக்கள் அறிய அவாக் கொண்டுள்ளார்கள் என்பதையும் மறுக்கமுடியாது, விசேஷமாக ரஸிகர்களுக்கு பெண் நக்ஷத்திரங்களின் பூர்வோத்திரங்களை அறிந்துகொள்ளவே பெரும் ஆவல் கொண்டிருப்பதால் நாங்கள் திரையில் மிளிரும் நக்ஷத்திரங்களுள் ஒருவரான ஸ்ரீமதி மாதுரீதேவி வாழ்க்கை வரலாறு ஒன்றை வெளியிட்டு சினிமா ரஸிகர்களின் சிந்தையை மகிழ்விக்க எண்ணி வெகு சிரமத்துடன் அச்சிட்டு வெளியிடலானேம். இந்த பணிக்கு எமக்கு பல வகையிலும் உதவி புரிந்த குண்டூசி காரியாலயத்தாரனைவருக்கும் எமது மனமார்ந்த வந்தனம் செலுத்துகிருேம்.

சென்னை
1—3—51

கோக்கரகோ பதிப்பகம்.



மாதுரி தேவி

வாழ்க்கை வரலாறு

கொக்கரகோ பதிப்பகம்

மாதுரி தேவி

வாழ்க்கை வர்ணனை

★



பெண்ணாய்ப் பிறந்த ஒருவருக்கு சமையல் செய்வதற்குத் தெரியாது என்று வைத்துக்கொள்ளுங்கள்; அவரைப் பற்றி உங்களுக்கு என்ன தோன்றும்? "இந்த அம்மாள் அடுத்த ஜன்மத்தில் ஆண் பிள்ளையாகப் பிறக்கவேண்டும்" என்று "சபிக்க" நினைப்பீர்களல்லவா? ஆனால் உங்கள் சாபம் பலிதமடைவதற்கு நீங்கள் தான் **முனிவர்கள்** அல்லவே! அதற்குப் பதில் "இந்த அம்மாள்



சினிமாப் படங்களிலாவது ஆண வேஷங்களில் நடிக்க வேண்டும்" என்று "ஆசீர்வதித்தீர்களானால்" அது ஒரு வேளை பலித்தாலும் பலிக்கக் கூடும். இப்படி யாராவது ஆசீர்வதித்ததின் விளைவாகவோ என்னவோ, சமையல் செய்யத் துளியும் அறியாத பிரபல நக்ஷத்திரம் மாதுரி தேவிக்கு சினி

ஜுபிடரின் "கன்னியின் காதலி"யில் மாதுரியின் மூன்றுவித தோற்றங்கள்.

மாப் படங்களில் அடிக்கடி ஆண் வேஷங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. அவரும் ஆண் வேஷங்களை நடிப்பதில் மிகுந்த அனுபவம் பெற்று வருகிறார். முதலில் அவர் மாடர்ன் தியேட்டர்ஸாரின் **ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி** படத்தில் ஆண் வேஷத்தில்



நடித்தார். அவர்மீது ஐந்து பெண்கள் மோகம் கொள்ளும்படியும் செய்து வைத்தனர்! ஜுபிடர் பிக்சர்ஸாரோ அவருக்கு **கன்னியின் காதலியில்** இரண்டு ஆண் வேஷங்களை அளித்து, மிக "தர்ம சங்கடமான நிலைமை"யையும் ஏற்படுத்தி இருக்கின்றனர்!

"சமைக்கத் தெரியாததற்குத் தண்டனையாகத் தான் இப்படி உங்களுக்கு ஆண் வேஷங்களாக அளிக்கப் படுகின்றன" என்று நான் தமாஷாக மாதுரியிடம் கூறினேன். பீறிக் கொண்டு, வந்த சிரிப்பை அவர் அடக்கிக் கொண்டு "அப்படியானல் நான் எப்படியா





வது சமையல் செய்யக் கற்றுக்கொண்டு விடுகிறேன். எனக்கென்னவோ உண்மையில் ஆண் வேஷங்களில் நடிக்கப் பிடிக்கவில்லை'' என்று கூறினார்.

“ தாராளமாய்க் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கணவர் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொண்டிருக்கிறாரல்லவா?''







என்று சிரித்தபடி கேட்டேன். அருகில் வீற்றிருந்த மாதுரியின் கணவர் சிரிப்புத் தாங்காமல் "படீர்" என்று சிரித்துவிட்டார்!

எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு—மாதுரி தேவி தீர்மானித்தபடி சீக்கிரமே சமையல் வேலையைக் கற்றுக் கொண்டு விடுவார் என்று. தம் பெற்றோர்களின் பிடிவாதமான எதிர்ப்பையும், வேறு சில கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு தமது விருப்பப்படியே ஒரு பிரபல சினிமா நக்ஷத்திரம் ஆகியிருக்கும் அவருக்கு மனம் வைத்தால், இதுதானா பிரமாதமான காரியம்?

★



மாதுரி தேவி சினிமாவில் சேர்ந்தது ஒரு எதிர்பாராத சம்பவமாகும். அவர் மனதில், சினிமாவில் சேர்ந்து நடிக்க வேண்டும் என்ற விதையை ஊன்றியவர் சந்திரகாந்தா படத்தில் நடித்திருக்கும் கோசலம் ஆவார். வித்தை ஊன்றியதோடு நின்றுவிடாமல் அந்த வித்து முளைத்து, மலர்ந்து, காய்த்து, பழமாகும் வண்ணம் செய்து வைத்தவரும் அவரேதான்.





“சுமார் பதினோரு வருஷங்களுக்கு முன்னால் ஒரு நாள் சாயங்காலம் மாதுரி தம்பெற்றோர்களுடன் கடற்கரைக்குச் சென்றிருந்தார். பெற்றோர்கள் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பேச்சை ஆரம்பித்தனர். சிறுமி மாதுரியோ தம்முடன் வந்த சில பெண்களைச் சேர்த்துக் கொண்டு விளையாட ஆரம்பித்தார். அதற்கு சில கஜ தூரத்தில்தான் நடிகர் கோசலம் உட்கார்ந்திருந்தார்.

மாதுரி இளவயதிலேயே மிகுந்த குறும்புத்தனமும், 'வெடுக் வெடுக்'கென்று பேசும் வழக்கமும் கொண்டிருந்தார். அவருடைய குறும்புத்தனங்களையும், துறுதுறுப்பான பேச்சையும், அழகிய முகத் தோற்றத்தையும் கவனித்தபடி உட்கார்ந்திருந்த கோசலத்திற்கு, "இந்தப் பெண் சினிமாவில் நடித்தால் நன்ருய் இருக்குமே" என்ற எண்ணம் ஏற்பட்டது. இந்த எண்ணம் அவரை விட்டு அகல மறுத்ததால் அவர் மாதுரியை அருகில் அழைத்து, "ஏனம்மா, உனக்கு சினிமாவில் நடிக்க இஷ்டமா?" என்று கேட்டார். இதைக் கேட்ட மாதுரி ஆச்சரியத்துடன் "நானு!" மனிதர்கள் எப்படி சினிமாவில் நடிப்பது? அட்டைப் படங்களை வைத்துக் கொண்டு தானே சினிமாப் படங்களைப் பிடிக்கிருர்கள்?" என்று கேட்டார்.

"பொன்முடி" படத்தில்



கோசலம் உரக்கச் சிரித்து விட்டார். மாதுரியோ திகைத்துப் போனார். ஒரு நிமிஷம் கழித்து, கோசலம் தம் சிரிப்பை அடக்கிக் கொண்டு கூறினார்: "சினிமாவில் நீ பார்ப்பவை அட்டைப் படங்களல்ல. அசல் மனிதர்கள்தான் அப்படி எல்லாம் நடிக்கிருர்கள். நான்கூட

ஒரு சினிமா நடிகன் தான் தெரியுமோ?" என்றார்.

மாதுரி ஆச்சரியத்தில் மூழ்கிப்போனார். அவரால் முதலில் நம்பவே முடியவில்லை. சினிமாப் படங்கள் எவ்விதம் தயாரிக்கப் படுகின்றன என்பதை கோசலம் விளக்கிய பின்பே அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. "அப்படியானால்....நான் கூட சினிமாவில் நடிக்கலாம் என்கிறீர்களா?" என மாதுரி ஆவலோடு கேட்டார்.

"ஏன் முடியாது? இஷ்டமானால் சொல்லு. நானே உன்னைச் சேர்த்து வைக்கிறேன்" என்று கூறினார் கோசலம்.



லக்ஷ்மி விஜயத்தில் பி. எஸ். கோவிந்தனோடு மாதுரி இவ்வண்ணம் தோற்றமளிக்கிறார்.

கோசலத்தினிடம் மாதுரி தம்முடைய முடிவை தெரிவிப்பதற்குப் பதிலாக தடாலென்று எழுந்திருந்து தம் பெற்றோர்கள் இருந்த இடத்திற்கு

ஓடினர். சில நிமிஷங்களுக்குப் பிறகு மாதுரி திரும்பி வந்து, "அங்கே வாருங்கள்; அப்பா உங்களைப் பார்க்க வேண்டுமாம்" என்று கோசலத்தை அழைத்தார். கோசலம் மாதுரியின் பெற்றோர்கள் இருந்த இடத்திற்குச் சென்றார். சினிமாவைப் பற்றி அவர்களுக்குள் பேச்சு ஆரம்பமாகியது. சினிமாவில் சேர்ந்து நடிக்க வேண்டும் என்று மாதுரி பிடிவாதமாய்க் கூறினர். கோசலம் இதை பலமாக ஆதரித்தார். அதைவிட பலமாக இந்த யோசனையை எதிர்த்தார்கள் மாதுரியின் பெற்றோர்கள். கடைசியாக, கோசலம், "மாதுரி சிறு பெண் தானே, சினிமாவில் தமாஷாக நடித்தால் என்ன? பிறகு வேண்டுமானால் நடிப்பதை நிறுத்திவிட்டால் போகிறது" என்று வாதித்தார். "ஆமாம், அப்பா; ஒரே ஒரு படத்தில் நடித்துவிட்டு நிறுத்தி விடுகிறேன்" என்று ஒத்துப் பாடினர் மாதுரி. பெற்றோர்களின் மனம் கொஞ்சம் இளகியது; அரை மனதுடன் சம்மதித்தனர்.

"பொன்முடி"யில் நரசிம்ம பாரதி, மாதுரிதேவி



ஒருவரை சினிமாவில் நடிக்கத் தூண்டிவிட்டு சும்மா இருப்பது நியாயமல்லவே? ஆதலால், மாதுரியை



மாடர்ன் தியேட்டர்ஸ் "மந்திரி குமாரி"யில் எஸ். ஏ. நடராஜனும் மாதுரி தேவியும்.

சினிமாவில் சேர்த்துவிடும் பொறுப்பையும் கோசலமே ஏற்றுக் கொண்டார். தீவிர முயற்சிக்குப் பிறகு **குமார குலோத்துங்கன், சியாம் சுந்தர்** ஆகிய படங்களில் மாதுரி நடிப்பதற்கு அவர் ஏற்பாடு செய்தார். ஆனல் கடைசி நேரத்தில் ஏதோ இடையூறல் இம் முயற்சிகள் பலிக்காமற் போய்விட்டன. கடைசியில் **பாண்டுரங்கா** தமிழ்ப் படத்தில் மாதுரிக்கு இந்திராணியின் வேஷத்தை வாங்கித் தந்தார் கோசலம். அதோடு அவருக்கு நடிக்கவும் அவரே கற்றுக்கொடுத்தார். அப்படம் 1939-ம் வருஷத்தில் வெளிவந்தது. அதுவே முதல் படமாக இருந்தபோதிலும் **பாண்டுரங்காவில்** மாதுரி திருப்தியளிக்கும் வகையில் நடித்திருந்தார்.

மாதுரியிடம் நல்ல நடிப்புத் திறமை இருப்பதை அறிந்த பிரகதி பிச்சர்ஸார் தங்கள் வாயாடி ஹாஸ்ய துண்டுப் படத்தில் அவரை நடிக்கச் செய்தனர். இப்படத்தில் அவரது நடிப்பு எல்லோரது கவனத்தையும் கவர்ந்தது. ரஸிகர்கள் அவரை மிகப் பாராட்டலானுர்கள். "இந்த புது நடிகை யார்? அடுத்தபடி எந்தப் படத்தில் நடிப்பார்?" என்றும் அவர்கள் கேட்கத் தொடங்கினுர்கள்.

ஆனல் மாதுரி அடுத்தபடி படத்தில் நடிப்பதையே நிறுத்திவிட்டார். வாயாடியில் நடிப்பதற்கே மாதுரி விடாப்பிடியாய் கெஞ்சிப் பெற்ருேர்களின் அனுமதியைப் பெற்ருர். அப்படத்தில் நடித்தபின் மாதுரி புஷ்பவதியானுர். அதன் காரணமாக, "நீ இனி சினிமாவில் நடிப்பதை அடியோடு மறந்துவிட வேண்டியதுதான்" என்று பெற்ருேர்கள் கண்டிப்பாய் கூறிவிட்டனர். மாதுரிக்கோ மேன்மேலும் நடித்து, ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆகவேண்டும் என்று ஆசை. ஆனல் பெற்ருேர்களின் முட்டுக்கட்டையை அப்போது அவரால் சமாளிக்க முடியவில்லை.

"மாதுரி சினிமாவில் நடிக்கக்கூடாது" என்று அவரது பெற்ருேர்கள் தீவிரமாய் தடுத்ததற்கு காரணம் குடும்ப கௌரவம்தான். மாதுரியின் (தாய்ப்) பாட்டனரான 'மிலிட்டரி' மாணிக்க முதலியார் அந்தக் காலத்தில் செல்வமும், செல்வாக்கும் மிகுந்து விளங்கி வந்தவர். "பி. ஆர். அண்ட் ஸன்ஸ்" கம்பெனியில் வேலை பார்த்து வந்த அவர் ஒரு வீணை வித்வானுகவும் விளங்கினுர்.





தன் ஆசைக் கணவர் எஸ். முகர்ஜியுடன்
மாதுரிதேவி ஏகாந்தமாக இருக்கும்
இந்தக் குளிர்ச்சியான காட்சியை
நீங்கள் வேறு எந்தத் திரைப்
படத்திலும் பார்க்க
முடியாது.

அவரிடம் சிக்ஷை சொல்லிக் கொண்டவர்களில் மாதுரியின் பாட்டியும் ஒருவராவார். ஸ்ரீ. மாணிக்க முதலியாரின் சிக்ஷை சங்கீதத்துடன் நிற்கவில்லை; காதலிலும் ஈடுபட்டது. பிறகு அவ்விருவரும் புருஷன் மனைவியாகவும் ஆனார்கள். அவர் காலத்தில், அவர் மூலம்தான் இந்தக் குடும்பம் ஹிந்து மதத்தை விட்டு, கதோலிக்க கிருஸ்தவ மதத்தைத் தழுவியது.

ஸ்ரீ. மாணிக்க முதலியாரைப் போலவே அவரது புத்திரர் ஸ்ரீ. ராஜமாணிக்க முதலியாரும் சங்கீதத்தில் ஒரு பெரிய வித்வான் ஆனார். ஆனால் அவர் வீணைக்குப் பதில் பிடிலைக் கைக்கொண்டார். அவரிடம் பிரபல பிடில் வித்வான் மைசூர் சௌடய்யா கூட கொஞ்ச காலம் சிக்ஷை சொல்லிக் கொண்டாராம். தற்போது திருச்சி ரேடியோவில் கச்சேரி செய்து வரும் வீணை கனகாம்பாளும் மாதுரி தேவியின் உறவினர்தானாம்.

"மிலிட்டரி மாணிக்க முதலியாரின் புதல்வியான மனோரஞ்சிதம் அம்மாளை சுங்க வரி இலாக்காவில் உத்தியோகம் பார்த்து வந்த ஸ்ரீ. சூசை முதலியார் மணந்துக் கொண்டார். இவர்களுக்கு மூன்று ஆணும், மூன்று பெண்ணும் பிறந்தனர். அவர்களுள் கடைசியாக 1927-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதத்தில் பிறந்தவர்தான் **மாதுரி தேவி.**

மாதுரி தேவிக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் **கிளாரா.** அவர் சினிமாவிற்கு வந்ததும் தம் பெயரை "எம். எஸ். சந்திரா" என்று மாற்றிக்கொண்டு **பாண்டுரங்கா, வாயாடி** ஆகிய இரு படங்களில் நடித்

தார். ஆனல் இந்தப் பெயர் ஆகி வராததால்தான் அவர் சினிமாவிலிருந்து சில வருஷங்கள் விலகி இருக்க வேண்டியதாயிற்று—என்ற எண்ணத்தா

ஜூபிடர் "கன்னியின் காதலி"யில் மாதுரி தேவி



லோ என்னவோ, அவர் மீண்டும் படங்களில் நடிக்க வந்ததும் "மாதுரி தேவி" என்ற புதுப் பெயரை வைத்துக்கொண்டு நடித்து வருகிறார்.

மாதுரியின் சொந்த ஊர் (சென்னை) இராயபுரம். இவர் அங்குள்ள ஸெயின்ட் ஆண்டனீஸ் ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார். இரண்டாவது பாரத்தில் 'பாஸ்' ஆனதும் அவர் படிப்பை நிறுத்திக் கொண்டார். அவருடைய பாட்டனரும், தாய் மாமனும் சங்கீத வித்வான்களாக விளங்கியதால் குடும்பத்தில் எல்லோருமே சாதாரணமாகப் பாடும் திறமை பெற்றிருந்தனர். மாதுரிக்கு இனிய குரல் இருப்பதைக் கண்ட அவரது பெற்றோர்கள், அவருக்கு பிரபல ஸ்ரீ. ச. சு. சங்கரலிங்க நாடாரின் மருமகன் ஸ்ரீ. ரத்னவேல் நாடாரிடம் சங்கீத சிக்ஷை சொல்லிக்கொள்ள ஏற்பாடு செய்தனர். கொஞ்ச கால ஆரம்ப சிக்ஷைக்குப் பிறகு மாதுரி பிரபல பாடகி என். ஸி. வஸந்த கோகிலத்தினிடம் சங்கீதம் கற்க ஆரம்பித்தார். அந்த சமயத்தில் மாதுரி பல தடவை வஸந்த கோகிலத்தின் கச்சேரிகளில் தம்புரா மீட்டியிருக்கிறார்.

மாதுரிக்கு சிறுவயதிலேயே சங்கீதத்தில் மட்டும் அன்றி நாடகங்களில் நடிப்பதிலும் மிகுந்த பிரியம் இருந்து வந்தது. பள்ளிக்கூட நாடகங்கள் ஒன்றிலாவது அவர் பங்கெடுத்துக் கொள்ளாமல் இருக்க மாட்டார். தவிரவும் அவருக்கு ஆண் வேஷங்களில் நடிப்பது படங்களில்தான் முதல் அனுபவம் என்று நீங்கள் நினைத்து விடவேண்டாம். பள்ளிக்கூட நாடகங்களிலும் அவர் பெரும்பாலும்

ஆண் வேஷங்களிலேதான் நடிப்பது வழக்கம். ஒரு முறை அவர் ஒரு கிருஸ்தவ மத நாடகத்தில் நடித்த போது, அதற்கு தலைமை வகித்த பிஷப் தாமஸ் அவர்கள் அவரது நடிப்பைப் பாராட்டி ஐந்து ரூபாய்களை பரிசாக அளித்தாராம்.

வாயாடிக்குப் பிறகு மாதுரியின் மனக் கோட்டைகள் பெற்றோர்களால் தகர்க்கப்பட்டதால் அவர் மனம் உடைந்து போனார். ஆனால் எப்படியும் என்றைக்காவது ஒரு பிரபல சினிமா நக்ஷத்திரம் ஆகிவிடவேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவர் மனதை விட்டு அகலவே இல்லை. வேறு வழி இல்லாததால், அவர் சங்கீதத்தை விருத்தி செய்து கொள்வதிலும், தமிழ்ப் புத்தகங்களைப் படிப்பதிலுமாக தம் காலத்தைப் போக்கி வந்தார்.

இப்படியாக ஐந்து வருஷங்கள் கழிந்தன. இதற்குள் மாதுரியின் குடும்பத்தில் அவரது எதிர் கால வாழ்க்கையைப் பாதிக்கும் அநேக சம்பவங்கள் நிகழ்ந்தன. "சினிமாவில் நடிக்கக் கூடாது" என்று அவரது பெற்றோர்கள் விதித்திருந்த தடையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து வந்தது. இந்த சமயத்தில்—1945-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில்—மாதுரி தேவி வில்லியம்ஸ் முகர்ஜி என்ற கிருஸ்தவ அன்பரை மணந்து கொண்டார். ஸ்ரீ. முகர்ஜி தற்போது சென்னையில் தந்தி இலாக்காவில் உத்தியோகஸ்தராயிருக்கிறார். மாதுரி சினிமாவில் நடிப்பதை அவரது கணவர் ஆதரித்தார். ஆகவே, அவர் தம் பெற்றோர்களின் தடையை மீறி நடிக்கவும் தைரியம் கொண்டார். இந்தத் தீர்மானம்



ஜுபிடரின் "கன்னியின் காதலி"யில்

அவரது குடும்பத்தில் ஒரு பூகம்பத்தை உண்டுபண்ணிவிட்டது. பெற்றோருக்கும் அவருக்கும் மனஸ்தாபம்கூட ஏற்பட்டது. ஆனால், மாதுரி துளியும் தயங்கவில்லை; தம்

நெடுநாளைய மனக் கோட்டைக்குள் பிரவேசிப்ப தற்கு ஆயத்தமானார்.

இந்த சமயத்தில், மாதுரி சங்கீத வித்வான் ஸ்ரீ. யானை வைத்தியநாத ஐயரிடம் சிக்ஷை சொல்லிக் கொள்ள ஆரம்பித்திருந்தார். ஒரு நாள் அவர் மாதுரியை அழைத்துக் கொண்டு, ஸ்ரீ. வைரம் அருணாசலம் செட்டியார் சென்னையில் நடத்தி வந்த **திருமழிசை ஆழ்வார்** நாடகத்தைப் பார்க்கச் சென்றார். அங்கு இவர்களை டைரெக்டர் டி. வி. சாரி தற் செயலாகச் சந்தித்தார். அவர் மாதுரியைச் சேலம் மீனாக்ஷி பில்ம்ஸாரிடம் சிபார்சு செய்தார். **லக்ஷ்மி விஜயம்** படத்தில் மாதுரிக்கு நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படத்தில் மாதுரி அமுதா, குமுதா என்ற இரு சகோதரிகளின் வேஷங்களில் நடித்திருக்கிறார். "சந்திரா" என்ற பெயரை அவர் உதறி விட்டு, "மாதுரி தேவி"யாக ஆனது இந்தப் படத்தில் தான். அது முதல் மாதுரியின் வாழ்க்கையிலும் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகி விட்டது என்று சொல்ல வேண்டும்.

லக்ஷ்மி விஜயத்தில் மாதுரி திறம்பட நடித்திருந்தார். இதைப் பார்த்த ரஸிகர்கள் "இது யாரப்பா, இந்த புதிய நடிகை? ரொம்ப நன்றாக நடிக்கிறாரே!" என்று ஆச்சரியம் அடைந்தனர். ஆனால் என்னைப் போன்ற சில சினிமா உலக ஜாம்பவான்களுக்கு மட்டும் சந்தேகம் ஏற்பட்டது. "இவரைப் பார்த்தால் **எம். எஸ். சந்திரா** மாதிரி இருக்கிறதே" என்று பிறகு விசாரித்ததில் சந்தேகம் நீங்கியது.

லக்ஷ்மி விஜயத்தில் நடித்துக் கொண்டிருந்த போதே அவரது நடிப்புத் திறமையை மாடர்ன் தியேட்டர்ஸார் கவனித்தனர். தங்கள் **ஆயிரம் தலை வாங்கி அபூர்வ சிந்தாமணியில்** நடிப்பதற்கு மாதுரியை ஒப்பந்தம் செய்து கொண்டனர். அப்படத்தில் மாதுரி பஞ்ச வஞ்சியரை மணப்பதாக அழைத்துச் செல்லும் தம்பதியாக **ஆண்** வேஷத்தில் நடித்திருக்கிறார்.

இதன் பின்னர், ஜூபிடர் பிச்சர்ஸார் மாதுரியை இரண்டு படங்களுக்கு ஒப்பந்தம் செய்துக் கொண்டனர். **மோஹினியில்** அவர் மூந்தின இரண்டு படங்களை



மாடர்ன் தியேட்டர்ஸ் "பொன்முடி"

விட ரஸிகர்களின் மனதை அதிகம் கவர்ந்தார். பிறகு ஜூபிடரின் **கன்னியின் காதலி** படத்தில் சந்திரிகா, கலைமணி, ஆதித்தன் ஆகிய மூன்று வேஷங்களில் நடித்திருக்கிறார். முக்கியமாக கலைமணி என்ற ஆண் வேஷத்தில் அவர் தோன்றுகையில் அவரது நடிப்புத் திறமை நன்கு வெளியாகியுள்ளது.

கன்னியின் காதலி படம் நல்ல வெற்றி பெற்றது போலவே மாதுரியும் சினிமாவுலகில் நிரந்தரமான ஸ்தானம் பெறுவதில் வெற்றி பெற்றார். அவரது வெற்றி மாடர்ன் தியேட்டர்ஸாரின் கவனத்தைக் கவர்ந்தது. அவர்கள் மாதுரியை இரண்டு படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டனர். **பொன்முடி, மந்திரி குமாரி** ஆகிய இரு படங்களிலும் மாதுரி தேவி வெற்றிகரமாய் நடித்து முந்தின படங்களில் தாம் பெற்ற புகழைக் காப்பாற்றிக் கொண்டார்.

மாடர்ன் தியேட்டர்ஸின் இரண்டு படங்களில் நடித்தபின், ஜூபிடர் பிக்சர்ஸார் மறுபடியும் தங்கள் **மர்மயோகி**யில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டனர். இப்படம் சமீபத்தில் வெளிவந்து வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படத்தில் மாதுரி கலாவதியாகத் தோன்றி கச்சிதமாய் நடித்து ரஸிகர்களின் பாராட்டுதல்களைப் பெறுகிறார்.

மாதுரிக்கு இனிய சாரீரமும், சுயமாகப் பாடும் திறமையும் இருக்கிறது. **பாண்டுரங்கா, வாயாடி** ஆகிய இரு படங்களிலும் அவர் சொந்தக் குரலிலேயே



மாடர்ன் தியேட்டர்ஸ் " மந்திரி குமாரி "யில்

பாடியிருக்கிறார். எனினும் எந்தக் காரணத்தாலோ மற்ற படங்களில் அவருக்கு குரல் இரவல் வாங்கப்

பட்டிருக்கிறது. லக்ஷ்மி விஜயத்தில் பழனி பகீரதி யின் குரலும், மோஹினி, கன்னியின் காதலி ஆகிய படங் களில் கே. வி. ஜானகியின் குரலும் மாதுரிக்காக இரவல் வாங்கப்பட்டுள்ளது. பிறகு பொன் முடியிலோ அவருக்காக குமாரி ரத்தினம் பாடியிருக்கிறார்.

ஹாஸ்ய பாகத்தில் அவர் முன்பு நடித்து நல்ல புகழ் பெற்றிருந்தாலும், மாதுரிக்கு ஹாஸ்ய பாகத் தில் நடிக்க இஷ்டமில்லையாம். சோகம், வீரம் இவை மிகுந்த பாத்திரங்களையே தாம் மிக விரும்புவதாக அவர் கூறுகிறார்.

சுமார் ஐந்து அடி உயரமும், நல்ல முக அழ கும், மாநிறமும் உடைய மாதுரி தேவியிடம் பவ்ய குணமும் காணப்படுகிறது. படாடோபமற்ற முறை யில் அவர் வாழ்க்கை நடத்தி வருகிறார். பேச்சை ரஸிக்கவும், ரஸமாகப் பேசவும் அவருக்குத் தெரிந் துள்ளது. பிரமாதமாக நடித்து, ஏராளமான புக ழைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்ற துடி துடிப்பு அவரிடம் காணப்படுகிறது. சமீபத்தில் அவர் நடித்து வெளி வந்துள்ள படங்களைப் பார்க் கையில், இந்த லக்ஷியத்தில் அவர் பூரண வெற்றி பெருவாரென்றே நான் நினைக்கிறேன்.

*   *   *

தோன்றி மறையும் நக்ஷத்திரங்கள் போலல் லாமல், அடுத்தடுத்து தோன்றி ஆதியில் "யார் ஐயா இந்த மாதுரிதேவி?" என்று ஆச்சரியத்துடன் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்த ரஸிகர்களின் உள்ளங்களில் படம் பிடித்து விட்டாற் போல்

பதிந்து விட்டதோடு, அவர்கள் கொண்டிருந்த சந்தேகங்களையும் அகற்றி தான் இன்னார் என்பதையும் விளக்கி, அவர்கள் சிலாக்கிக்கும்படியான பாக்கியமும் அடைந்தார். இத்தகைய பேறு சினிமாவானில் எல்லோருக்கும் எளிதில் கிட்டி விடுவதில்லை. அது சிலருக்குத் தான் கிட்டி இருக்கிறது. அந்த வரிசையில் மாதுரியும் ஒருவராவார்.

மந்திரி குமாரியில் மாதுரி தேவி எவ்வளவு கீர்த்தியுடன் நடித்திருக்கிறார் என்பது நாம் சொல்லாமலே ரஸிகர்கள் தெரிந்துக் கொள்ளலாம். மலை உச்சியிலிருந்து தன்



ஜூபிடர் பிக்சர்ஸ்
"மர்ம யோகி"யில்

வஞ்சகக் கணவனை பழிக்குப் பழி வாங்கும் படலத்தில் மாதுரிதேவியின் நடிப்பு நம்மை பிரம்மிக்கவே செய்தன. மாதுரிதேவி சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு முகபாவமுடையவர். அதோடு வினயமான வசனமும் உள்ளவர். ஸ்திரி சாகசத்தில் தனக்கு மிக்காரெவருமில்லை என்பதையும் அவரின் நடிப்பிலிருந்து நாம் நன்கு அறியலாம்.

1 & 4 "லக்ஷ்மி ஜயத்" தில் 2. "வாயாடி" படத்தில் 3. "கன்னியின் காதலி" பரீக்ஷார்த்த மேக்கப். 5. மாதுரி சந்திராவாக இருந்தபோது 6. மாதுரியும், மாதுளையும்.

மாதுரி தேவி தனக்கு வந்த இடைஞ்சல்களை' அதாவது படத்தில் நடிக்கக் கூடாது என்ற தடைகளை எல்லாம் பொறுத்திருந்து உடைத்தெறிந்தார். அது தன் விடா முயற்சியாலேயே தான் எப்படியாகிலும் முன்னுக்கு வரவேண்டும் என்ற ஒரே நோக்கங் கொண்டிருந்த மாதுரி இத்தடைகளை வெல்லுவது சிரமமல்ல.

தன் தடைகளை எல்லாம் வென்ற சாதுர்யமான மாதுரி தேவியை தம் தம் படங்களில் நடிக்க வைத்து பெயரும், புகழும், பணமும் சம்பாதிக்கலாம் என்ற பட முதலாளிகளின் நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்வித்து பலனளித்தார்.

மாதுரி படங்களில் நடிக்கக் கூடாது என்ற தடை விதிக்கப் பட்டது ஆச்சரியமானதல்ல. நடிக்க வேண்டும் என்று முன்வரும் நடிகர்களுக்கு நமது நாட்டில் கட்டாயம் இந்தத் தொல்லை வரத்தான் செய்கிறது. நடிக்கும் ஆர்வங் கொண்டுள்ள இளம் நடிகைகளின் பெற்றோர், உற்றார், உறவினர், இன்








னும் வருவோர் போவோர் யாவரும் ஒரே குரலில் 'உம் நம் வீட்டுப் பெண் படத்தில் நடிப்பதாவது மண்ணாங் கட்டியாவது' என்ற அபிப்பிராயத்தைக் கூறிவிடுவார்கள். சமத்திற்கு தக்கவாறு ஒத்து ஊதி தாளம் போடும் பேர்வழிகள் நமது நாட்டில் அதிகம் ஏன் அப்படி இருக்கிறார்கள் உண்மை பற்றினாலா? வெனின் அல்ல; பொறாமையால் என்று நாம் திடமாகச் சொல்லலாம். எங்கே நன்கு பணம் சம்பாதித்து நம்மை

மிஞ்சி விடுவார்களோ என்ற எண்ணம் உடையவர்களே அதிகம் இன்றைய உலகில்.

அந்த எண்ணங்களை எல்லாம் மாதுரி தேவி சிதற அடித்து முன்னுக்கு வந்தது தனது புத்தியின் மேன்மையைப் புகழ வேண்டியதே.

தனது பெயரும் புகழும் என்றும் நிலைத்திருக்க இன்று தமிழ் நாட்டில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் **மர்மயோகியில்** மாதுரி தேவி நன்ருக நடித்திருப்பது ரஸிகர்களின் மனத்தை விட்டு என்றும் அகலாது என்றே கூறலாம்.

மாதுரி தன் எண்ணங்களை பூர்த்தி செய்தது போலவே தான் நீண்ட ஆயுளுடன் இன்னும் பல படங்களில் நடித்து பெயரும் புகழுமடைய ஆசீர்வதிக்கிறேன்.

Printed at Commercial Printing & Publishing House, Madras-1.

கொக்கரக்கோ பதிப்பகம்

சென்னை - 12

★

எமது பதிப்பகத்தில் கிடைக்கும் புத்தகங்கள் :

1. கெட்டிக்கார பட்டாபி

("ஆயன்")

விலை 0—2—0

இது குழந்தைக் கதை. சிறுவர்களுக்கு நல்ல புத்திமதிகளை போதிக்கும் நல்ல கதையாகும். தன் கையே தனக்குதவி என்ற அடிப்படையில் எழுதப்பட்டது. வேண்டுவோர் 0—2—6 தபால் பில்லை அனுப்பி பெறலாம்.

2. கமலாவின் கருணை

(கோகிலா)

விலை 0—2—0

இது குழந்தைக் கதை. கமலா தன் அத்தை மகன் ஆனந்தனை அன்புக்குரியவனாக எண்ணி பல் ஆபத்துகளிலிருந்து அவனை மீட்டு கடைசியில் அவனை மணக்கிருள். வேண்டுவோர் 0—2—6 தபால் பில்லை அனுப்பி பெறலாம்.


அழகுக்கு அழகு செய்யும்
ஆபரணங்கள்
P.A.R
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
தந்தி "ராஜா" கோயமுத்தூர் போன்: 268